**த. நா.ச.பே. எண் : 026** **நாள் : 07.06.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (7.6.2018) சட்டப்பேரவையில், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொலக்குணம் கிராமத்தில் கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மண் சரிந்து உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து உரையாற்றினார்.**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், பொலக்குணம் கிராமத்தில் 31.5.2018 அன்று பாறைகளை வெடிக்கச் செய்து கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் திரு. குமார், திரு. பாண்டியன் என்பவரின் மகன் திரு. தங்கராஜ் மற்றும் திரு. நீலகண்டன் என்பவரின் மகன் திரு. சீதாராமன் ஆகியோர் 31.5.2018 அன்று மண் சரிந்து உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, திரு. குமார், திரு. தங்கராஜ், திரு. சீத்தாராமன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் மூலம் நிவாரணமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

நிலத்தின் உரிமையாளர் திரு. பாலசுப்பிரமணியன் 1.6.2018 அன்று கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இது தொடர்பான வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்ற விபரத்தை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**